RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt2449

# தமிழர் மரபும் நிகழத்துக் கலையும்

ஆ. பிரபாகரன் [அ, *]

[அ] தமிழ்த்துறை, நேரு தொழில்நுட்பக் கல்லூரி, காளியபுரம், கோயம்புத்தூர், தமிழ்நாடு, இந்தியா

# Tamil Tradition and Performing Arts

A. Prabakaran [a, *]

[a] Department of Tamil, Nehru Institute of Technology, Kaliyapuram. Coimbatore, Tamil Nadu, India

* Corresponding Author: Nitprabakaran.a@nehrucolleges.com

Received: 12-05-2024
Revised: 03-08-2024
Accepted: 07-08-2024
Published: 15-08-2024

Check for updates

## ABSTRACT

Though food, clothing and shelter are the basic needs of human beings, the ancient people followed a policy to pass on the culture, culture and traditions of man to the next generation. In order to reach out to people who were ignorant of literacy and outside life, the arts were developed primarily with entertainment. At first, art began to alleviate the physical and mental pain of the people. Later, the arts were well received by the people and later the artists used this as the main focus to formulate moral concepts and ways of life for the people. Tradition is an age-old way of life. Not only that, the life of the people was prosperous and they continue to preach good deeds through the arts to improve their morality till date. It is an ancient tradition that though people are in one place, they know what is happening in other places only through art. These arts are not merely a form of entertainment but also a testimony to the life of human beings. The importance of the people, the king, the country, etc., was an important part of the excellence of the arts during the Sangam Age. The purpose of this article is to see that such arts are part of the tradition and life of the Tamils.

**Keywords:** Sangam Age, Performing Arts, Morality, Tamil Tradition

## முன்னுரை

பழங்காலம் தொட்டு தற்காலம் வரை இலக்கியங்கள் மனிதர்களை செம்மை படித்தி வருகிறது அதில் சங்க இலக்கியங்கள் முன்னுரிமை பெற்றதாகவே விளங்குகிறது மனிதனுக்கு இன்ப முறைகளை இன்றளவும் கலையும், கலைஞர்களும்,தந்த வண்ணம் உள்ளனர் உலகில் இசைக்கு மயங்காத உயிர்கள் இல்லை என்பது எல்லோரும் அறிந்ததே அவ்வண்ணம் பார்க்கையில். இசையோடு கலைகள் படைப்பதில் தமிழர்கள் தனித் தேர்ந்தவர்களாக விளங்குகின்றனர். உலகத் தரத்தில் மூத்தகுடியாக தமிழ் கூடி விளங்கினாலும் அதன் பெருமையை தமிழர்களின் மரபையே சாறும் தமிழ் மக்களின் இருப்பிடங்கள் அதிக அளவு கிராமங்களை சாறும். அதே பார்வையில் கிராமப்புற மக்கள் கடவுள் வழிபாடுகளிலும், சடங்கு முறைகளிலும், நிகழ்த்து கலைகளை, இணைத்து பங்களிப்பது தனிச்சிறப்பாகும். வழிபாடுகளின் வரைமுறை மாறினாலும் கலைகளின் தாக்கம் தமிழர்களின் கண்களாகவே விளங்குகிறது,மரபாக உள்ளது. அது மட்டுமல்லாமல் தமிழர்களின் வாழ்வியலில் நிகழும் ஒவ்வொரு நிகழ்வையும் கலைகளோடு ஒப்பிட்டுப் பார்ப்பது தனி சிறப்பாக விளங்குகிறது. தமிழர்களின் கலை திறனும் அழகுணர்ச்சியும் இன்று வண்ணம் வியத்தகு வியப்பில் ஆழ்த்துகிறது. அக்கண்ணோட்டதோடு பார்க்கையில் தமிழும் கலையும்,கலையும் இலக்கியமும், கலையும் வாழ்வியலும், என்ற மூன்று கூற்றுகளோடு கலைகளை அறிவதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

## தமிழும் கலையும்

தமிழர்கள் எண்ணற்ற கலைகளை போற்றி வளர்த்தனர் அவ்வகை சாடலுக்கு இலக்கியங்கள். முதன்மை வகுத்தனவாக விளங்குகின்றன. பண்டைய காலத்தில் கூத்து கலைஞர்கள் இருந்ததையும் அவர்கள் நிகழ்த்துக் கலைகளில் சிறந்து விளங்கியதையும் போற்று வண்ணம் இலக்கியங்கள் அவர்களின் பெயர்களை பறைசாற்றுகின்றனர் கூத்தர், பெறுநர்,விரலியர், கோடியர்,பாணன் பாடிணி போன்றுகுறிப்பிடப்பட்டுள்ளன. மக்கள் தன்நாட்டு வளத்தையும் வெற்றியின் பெற்று தந்த மக்களை மறவாது போற்றும் வண்ணம் இருந்ததாக பெரும்பாணாற்றுப்படையில் அறிய முடிகிறது வள்ளியின் சிறப்பை பாடுவதாக இப்பாடல் அமைகிறது.

“வாடா வள்ளியின் வளம் பல தருஉம்

நாடு பலகழிந்த பின்றை.”1

பெரும்.370,371.

ஆகிய பாடல்கள் சிறப்பிக்கிறது.

அதுமட்டுமல்லாமல் நினைவுச் சின்னமாக விளங்கும் மரபை கூட கலையாக கொண்டாடியது மதுரைக்காஞ்சி நூற்பாவில் குறிப்பிடப்படுகிறது.

“பரதவர் மகளிர் குரவை வோடு ஒழிப்ப.”2

மதுரைக்காஞ்சி”96,97

ஆண்களும் பெண்களும் சேர்ந்து கலைகளை போற்றினாலும் அரசரும் மக்களோடு இணைந்து மகிழ்ந்ததை துணங்கைஆட்டமாக மதுரைக்காஞ்சி குறிப்பிடுகிறது.

“விளவு நின்ற வியன் மருகில்”3

மதுரைக்காஞ்சி”3

பின்பு மக்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து நாட்டின் செழுமைக்காகவும் போரில் வெற்றி பெற வேண்டும் என்ற கலைகள் மூலம் வழிபாடு செய்வதை. பழங்கால இலக்கணமான தொல்காப்பியம் குறிப்பிட்டுள்ளது.

“மறங்கடை கூட்டிய. துடிநிலைச் சிறந்த. கொற்றவை நிலையும் அகத்திணை புறனே.”4

தொல். பொருள். நூற் 4

அது மட்டுமல்லாமல் குறிஞ்சி நில மக்கள் முருகனை வேண்டி கலைகள் தொகுத்ததையும் திருமுருகாற்றுப்படை கூறியுள்ளது.

“செறுநாத் தேயத்துச் செல்லும் முடிக்கி கறுவுகோள் நெஞ்சமோடு களம் வேட்டன்றே ஒரு முகம்.”5 திருமுருகாற்றுப்படை.நுற் 5

இப்பாடலில் முருகனின் முகம் சிவந்துள்ளது காண முடிகிறது. அப்படி போரில் வென்ற மக்கள் துடி என்ற இசை கருவியை இசைத்து கலையில் நிகழ்த்துவதை இசையின் நூலான பரிபாடலும் குறிப்பிடுகிறது.

“துடியின் அடி பெயர்த்து தோளசைத்து தூக்கி.

அடிநறா மகிழ் தடப ஆடுவான் தகைமையன்.”6 பரி.26

என்ற பாடல் வரி சிறப்பிக்கிறது கலைகள் தமிழுக்கும் தமிழுக்கும் மரபாக விளங்கியதை இப்பாடல்கள் இயங்குகின்றன.

## கலையும் இலக்கியமும்

நாடோடிகளாகத் திரிந்த மனிதனை நாகரிக மனிதனாக மாற்றிய பெருமை கலையினையே சாறும். வாழ்வில் நிகழும் கலைகள் மூலம் மனிதன் பெருமளவு தன்னை உயர்த்திக் கொண்டான்.

சிறு வெற்றி கிடைத்தாலும் அதனை பெரிதாக கொண்டாட தொடங்கினான். அப்பொழுதே கலைகள் புத்துயிர் பெற்றன. அதுமட்டுமல்லாமல் புறம் சார்ந்த நூற்பாக்களில் வீரம்,வெற்றி,கொடை, போன்றவைகலைகள் மூலமாகவே மனிதர்களும் கொண்டு சேர்க்கப்பட்டது. புறநானூற்றில் ஐவகை பண்களையும் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளன அதில் விளரி பண் வட்டமிட்டு ஆடும் ஆட்டத்தை ஒத்ததாக காணப்படுகிறது அதனை இப்பாடல் விளக்குகிறது.

“சிறா அர் துடியர் பாடுவன் மகாஅர் து வெள்ளுருவை மாயோற் குறுகி இரும்பூட்

பூச லோம்புமீன் யானும் விளறிக் கொட்டின் வெண்ணகி கடுகுவெண்.”7 புறம்.291

இப்பாடலில் வள்ளுறுவைப் போல மக்கள் வட்டமாக ஆடி கலைகளை கொண்டாடினர் என்று அறியப்பட முடிகிறது.

கலைகள் தமிழர்மட்டுமல்லாமல் வேற்றுநாட்டு அறிஞர்களையும். கவர்ந்த வண்ணம் உள்ளது. அங்கனம் பார்க்கையில் அறிஞர் மா சே துங் கூறுகையில்.

“கலையை மட்ட ரகத்திலிருந்து உயர்ந்த ரகத்திற்கு மாற்ற இலக்கியங்கள் முதன்மைச் சான்றாக உள்ளன”8

என்று குறிப்பிடுகிறார்

இலக்கியங்கள் வெறும் பதிவேடுகள் அல்ல அது மனிதர்களின் வாழ்வுகளை ஒத்து விளங்கும் தன்மையாக உள்ளது என்பதனையும் நம்மால் அறிய முடிகிறது நிகழ்த்துக்கலைகள் மறைய தொடங்கினாலும் இலக்கியங்களின் அதனை இன்று அளவும்போதித்த வண்ணம் தான் உள்ளன என்பதை தெளிவு படுத்துகிறது.

## கலையும் வாழ்வியலும்

கலைகள் பொதுவாக நிகழ்வுகளோடு முடிந்து போவதுகிடையாது அவை கலைஞர்களின் வாழ்வியோடு காணப்படும் முக்கிய அங்கமாகும்.

தமிழ்நாட்டின் பெரும்பாலான. கலைஞர்கள் வசிக்கும் இடங்களாக தென் மாவட்டங்களை குறிப்பிடுகின்றனர் இவர்கள் கலைகளை வாழ்வியலாக கொண்டு செயல்படுகின்றனர். இதன் தன்மையை இலக்கியங்களும் இயம்புகின்றன. அரசர்கள் கலைஞர்களை மேம்படுத்தவும், உயர்த்தவும், அவர்களை போற்றவும் பரிசுகளை வழங்கியதாக இலக்கியங்கள் கூறுகின்றன. முதன்மை தொழிலாக கொண்டு விளங்கும் கலைஞர்கள் தம் மட்டுமல்லாமல் பிற கலைஞர்களையும் பரிசு பெற வேண்டும் என்ற மேன்மையான பங்களிப்போடு செயல்பட்டது ஆற்றுப்படை நூல்கள் தெளிவாக உரைக்கின்றன.

கலைஞர்கள் தனிமனித வாழ்வியலாக விளங்காமல் நாட்டின் பண்பாடு,பாரம்பரியம், கலாச்சாரம், மரபு, போன்றவைகளை உள்ளடக்கியதாகவும் விளங்குகின்றனர் இதனை காக்கும் தன்மையாகதமிழ்நாட்டில்கலை மற்றும் பண்பாட்டு துறைஇக்கணம்வரைசெயல்பட்டு வருகிறது.

“சகல இலக்கியத்திற்கும் கலைக்கும் மூலாதாரம் அன்பு மனித சமூகத்தின் மீது அன்பு”9

என்று மா சே.துங் குறிப்பிடுகிறார்.

மனித சமூகத்தின் மரபாக கலைகளை காண வேண்டும்.

கலைஞர்களின் அன்பு நோக்கோடு பார்க்க வேண்டும் என்று வினாவிகிறார். அது மட்டுமல்லாமல்.

“கலையும் இலக்கியமும். பிரமாதமான அம்சங்களை மோசமான அம்சங்களையும் ஒன்றைப் போல மற்றொன்றையும் ஒரே மாதிரி வற்புறுத்தி பாரபட்சம் இல்லாமல் சித்தரித்துக் காட்டுகின்றனர்”10

என்பதையும் உரைக்கின்றார்.

கலைஞர்கள் இலக்கியங்கள் கூறும் மரபையே இன்று வரை கையாளுகின்றனர் இதில் புனைவாக ஏதும் இணையப்படவில்லை என்பது. முதன்மை சான்றாக விளங்குகின்றது.

## முடிவுரை

நிகழ்த்து கலைகள் வாழ்வியல் சான்றுகள் ஆகின்றன. கலைகள் ஒருபோதும் சுயநல கண்ணோட்டத்துடன் பார்வையில் பார்ப்பதல்ல மக்களின் நெறிப்படுத்தும் முறையாக பார்க்கப்படுகிறது. இக்கலைகள் ஒரு இனத்தின் அடையாளமாக அங்கீகரிக்கப்படுகிறது எத்தனையோ மனிதர்களைஅறவழியில் கொண்டு சென்ற பெருமை. கலைகளுக்கு உகந்தது என்று அறியப்பட முடிகிறது. நேர்பட பார்வையில் பார்த்தால் கலைஞர்களை ஆசான் பார்வையில் பார்ப்பது சிறந்தது என இக் கட்டுரையின் மூலமாக அறியலாம். இலக்கியங்களில் கல்வி,கொடை, அன்பு, அறம்,பண்பு, போன்றவைகளுக்கு முதன்மைகொடுப்பது போலவே கலைகளுக்கும் முன்னுரிமை அளித்து கொண்டிருந்தான் வருகிறது. கலைகள் வாழ்வியலைஎடுத்துக்காட்டும் கண்ணாடியாகும் திகழ்கிறது என்று கட்டுரையின் மூலமாக புலனாகிறது.

## References


சேதுங், மா. (1951) கலையும் இலக்கியமும், தமிழ் புத்தகலயம், சென்னை

தமிழன்னல், (2023) தொல்காப்பியம், மணிவாசகர் பதிப்பகம், சென்னை

நாகராசன், வி (2022) புறநானூறு, திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூல் பதிப்பகம், சென்னை

பரிமனம், அ. பாலசுப்பிரமணியன், கு.வே. (2004) பெரும்பாணாற்றுப்படை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை

வையாபுரி பிள்ளை (2004) சங்க இலக்கியம் பாரி நிலையம், சென்னை.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author’s have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2024. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License